செ.வெ.எண்: 35 நாள்: 21.12.2016

# பத்திரிகைச்செய்தி

## உணவுப் பொருட்களை செய்தித்தாள்களில் பொட்டலமிட்டு விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சியர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு

****

உணவு வணிகர்கள் உணவுப் பொருட்களை செய்தித்தாள்களில் பொட்டலமிடுதல், பஜ்ஜி போன்ற வறுத்த/பொரித்த உணவுப் பொருட்களை பரிமாறுதல் போன்றவை பின்வரும் காரணங்களுக்காக சுகாதாரக் கேடான பழக்கம் என இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையரகத்தால் உறுதிசெய்யப்பட்டு அவ்வாறு உணவுப் பொருட்களை செய்தித்தாள்களில் பொட்டலமிடுதல் மற்றும் பஜ்ஜி போன்ற வறுத்த/பொரித்த உணவுப் பொருட்களை செய்தித்தாள்களில் பரிமாறுதலை தடை செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

உணவு வணிகர்கள் உணவுப் பொருட்களை செய்தித்தாள்களில் பொட்டலமிடுதல், பஜ்ஜி போன்ற வறுத்த/பொரித்த உணவுப் பொருட்களை பரிமாறுதல் போன்ற சுகாதாரக் கேடான செயல்களை தொடர்ந்து பின்பற்றிவருகின்றனர். ஆனால், செய்தித்தாள்களில் பயன்படுத்தப்படும் மையில் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பல்வேறு வகையான உயிரியக்க மூலக்கூறுகள், நிறமிகள், பாதுகாப்புக் கூறுகள், கூடுதல் சேர்மானங்கள் போன்ற வேதிப் பொருட்கள் உள்ளன. மேலும், சேமித்து வைக்கப்படும் செய்தித்தாள்களில் பல்வேறு நுண்ணுயிர் கிருமிகள் வளர வாய்ப்புள்ளது. அதுமட்டுமில்லாது செய்தித்தாள்கள், இதரத் தாள்கள் மற்றும் மறுசுழற்சி செய்யப்பட்ட காகிதத்தில் தயாரான அட்டைகள் உலோக துணுக்குகள், கனிம எண்ணெய்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் வேதிப் பொருட்களால் அசுத்தமடைய வாய்ப்புள்ளது. இவ்வாறு உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில உள்ள செய்தித்தாள்களில் உணவுப் பொருட்களை பொட்டலமிடுதல், பஜ்ஜி போன்ற வறுத்த/பொரித்த உணவுப் பொருட்களை பரிமாறுதல் போன்றவற்றால் செரிமானக் கோளாறு மற்றும் தீவிர நச்சுத்தன்மை நம் உடலில் ஏற்பட வாய்ப்புள்ளது. அதிலும் குறிப்பாக வயதானோர், குழந்தைகள் மற்றும் உடல் உறுப்புகள் செயல்திறன் குன்றியது போன்ற நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த நபர்கள் அதிகம் பாதிப்படைகின்றனர்.

ஆகையால், பொதுமக்களுக்கு பாதுகாப்பான உணவை வழங்குவதை உறுதி செய்யும் விதமாக இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையரகமும் ஆணையர், தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையும் உணவு வணிகர்கள் உணவுப் பொருட்களை செய்தித்தாள்களில் பொட்டலமிடுதல் மற்றும் பஜ்ஜி போன்ற வறுத்த/பொரித்த உணவுப் பொருட்களை செய்தித்தாள்களில் பரிமாறுதல் போன்றவற்றை தடை செய்துள்ளதால் இன்று முதல் புதுக்கோட்டை மாவட்டத்தில் உணவு வணிகர்கள் எவரும் உணவுப் பொருட்களை செய்தித்தாள்களில் பொட்டலமிடுதல் மற்றும் பஜ்ஜி போன்ற வறுத்த/பொரித்த உணவுப் பொருட்களை செய்தித்தாள்களில் பரிமாறுதல் போன்றவற்றை மேற்கொள்ளக்கூடாது எனவும் உணவு பொட்டலமிடுதல் மற்றும் பரிமாறுதல் போன்றவற்றிற்கு பாத்திரங்கள், இலைகள், அனுமதிக்கப்பட்ட ப்ளாஸ்டிக் கொள்கலன்கள் ஆகியவற்றை மட்டும் பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பாக மாவட்ட உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலர் தலைமையிலான உணவுப் பாதுகாப்புத் துறை விழிப்பணர்வு நடவடிக்கைகனையும் ஆய்வுகளையும் மேற்கொள்ளும். போதிய வாய்ப்புகள் வழங்கிய பின்னரும் ஆணையை மீறும் உணவு வணிகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை செய்யப்படுகின்றது.

மேலும், நுகர்வோர்கள் சமைத்த உணவுப் பொருட்களை பார்சல் வாங்க கடைக்கு செல்லும் போது பாத்திரங்களை கொண்டு செல்ல வேண்டுவதோடு கடைகளில் உணவுப் பொருட்களை செய்தித்தாள்களில் பொட்டலமிடுதல் அல்லது பரிமாறுதல் போன்றவற்றைக் கண்டறிந்தால் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அல்லது மாவட்ட உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலர் அலுவலகத்திற்கு புகார் அளிக்கலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**